# DAILY CURRENT AFFAIRS APRIL 13

| CONTENT | EXAM REMAINER | KINDLY JOINS |
|---|---|---|
| 1. National News<br>2. TN State News<br>3. PYQ CA Questions<br>4. PRACTICAL MCQ'S<br>5. REVISION | **Group I- 06.09.2026**<br>மீதம் 145 நாட்கள்<br><br>**Group II & IIA- 25.10.2026**<br>மீதம் 194 நாட்கள்<br><br>**Group IV- 20.12.2026**<br>மீதம் 251 நாட்கள் | https://t.me/weshinetnpscexams<br><br>https://chat.whatsapp.com/LBUXIXSof5046E3GWmFuTs?mode=gi_t |

Visit youtube link : https://youtube.com/live/HfeX5OPKz9U



# 1. TODAY NEWS ARTICLES

# ஈரான்- அமெரிக்கா அமைதிப் பேச்சு தோல்வி

**இஸ்லாமாபாத், ஏப். 12:** ஈரான், அமெரிக்கா இடையே பாகிஸ்தானில் நடைபெற்ற அமைதிப் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனால் மீண்டும் மேற்காசியாவில் போர் மூளும் அபாயம் உருவாகியுள்ளது.

ஈரான் தரப்பில் 10 அம்ச திட்டம் முன்வைக்கப்பட்ட நிலையில், அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடக் கூடாது, ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகக் கட்டுப்படுத்துவது கூடாது என அமெரிக்கா சில நிபந்தனைகளை விதித்தது. அதில், இரு நாடுகளுக்கும்

## மீண்டும் போர் மூளும் அபாயம்



## ஹோர்முஸ் நீரிணையில் அனைத்து கப்பல்களும் தடுக்கப்படும்



**வாஷிங்டன், ஏப்.12:** ஹோர்முஸ் நீரிணை வழியாகப் பயணிக்கும் வெளிநாட்டு கப்பல்களை அமெரிக்க கடற்படை தடுக்கும் என்று அந்நாட்டு அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ட்ருத் சோஷியல் சமூக ஊடகத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவில் தெரிவித்துள்ளதாவது:

பாகிஸ்தானில் அமெரிக்கா–ஈரான் இடையிலான பேச்சில் பெரும்பாலான அம்சங்களில் இருதரப்புக்கும் உடன்பாடு ஏற்பட்டது.

# ஜோதிராவ் புலே பிறந்த தினம்: தலைவர்கள் மரியாதை

**புது தில்லி, ஏப். 11:** புகழ்பெற்ற சமூக சீர்திருத்தவாதி ஜோதிராவ் புலேயின் பிறந்த தினத்தையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் சனிக்கிழமை மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

'மகாத்மா' என்று புகழப்படும் ஜோதிராவ் புலே மகாராஷ்டிரத்தின் சதாரா மாவட்டத்தில் உள்ள கட்குன் கிராமத்தில் கடந்த 1827, ஏப்.11-ஆம் தேதி பிறந்தார். அவர் தீண்டாமை மற்றும் ஜாதிய ஏற்றத்தாழ்வை ஒழிப்பதிலும், விளிம்புநிலை மக்களுக்கு கல்வியறிவை வழங்குவதிலும் பெரும் பங்காற்றியவர். ஜோதிராவ் புலே மற்றும் அவரது மனைவி சாவித்திரி புலே ஆகியோர், நாட்டில் பெண் கல்விக்கான முன்னோடிகளாக விளங்கினர். கடந்த 1890, நவ.28-இல் ஜோதிராவ் புலே மறைந்தார்.

இந்நிலையில், ஜோதிராவ் புலேயின் பிறந்த தினத்தையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் தலைவர்கள் நினைவிடத்தில் உள்ள அவரது சிலைக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் சனிக்கிழமை மலர் தூவி மரியாதை செலுத்தினர். மேலும், எக்ஸ் பதிவு வாயிலாக அவருக்குப் புகழாரம் சூட்டினர்.



சமூக சீர்திருத்தவாதி மகாத்மா ஜோதிராவ் புலே பிறந்த தினத்தையொட்டி நாடாளுமன்ற வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி உள்ளிட்டோர்.

**குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு:** மகாத்மா ஜோதிராவ் புலே, விளிம்புநிலை பிரிவினரின் மேம்பாட்டுக்காக வாழ்வை அர்ப்பணித்தவர். பெண்களின் கல்விக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கிய அவர், சமூக சீர்திருத்தம் மற்றும் உள்ளடக்கிய தன்மைக்கான அழியாத பாரம்பரியத்தை விட்டுச் சென்றுள்ளார்.

**குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்:** விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்துக்காக குறிப்பாக பெண்கள் மற்றும் நலிந்த பிரிவினரின் கல்வி மேம்பாட்டுக்கு தன் வாழ்நாளை அர்ப்பணித்த முன்னோடியான சமூக சீர்திருத்தவாதி ஜோதிராவ் புலே. அவரது அயராத முயற்சிகள், நீதி - சமத்துவமான சமூகத்துக்கு அடித்தளமிட்டன.

**பிரதமர் மோடி:** தொலைநோக்குப் பார்வை கொண்ட சமூக சீர்திருத்தவாதி ஜோதிராவ் புலேயின் வாழ்க்கையானது, சமத்துவம், நீதி, கல்விக்கான லட்சியங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டதாகும். பெண்கள் மற்றும் விளிம்புநிலை மக்களின் உரிமைகளைக் காப்பதில் முன்னோடியாகச் செயல்பட்டார். அவரது முயற்சிகளால், அதிகாரமளித்தலுக்கு சக்திவாய்ந்த ஆயுதமாக கல்வி மாறியது. இந்த ஆண்டு ஜோதிராவ் புலேயின் 200-ஆவது பிறந்த தின கொண்டாட்டங்கள் தொடங்குகின்றன.

**எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி:** பாகுபாடு-சமத்துவமின்மைக்கு எதிரான ஜோதிராவ் புலேயின் அயராத போராட்டம், சமத்துவம் மற்றும் நீதிக்கான பாதையை தேசத்துக்கு காட்டியது. அவரது லட்சியங்களும் சிந்தனைகளும் சமூக நீதியை நோக்கி பயணிக்க தொடர்ந்து உத்வேகமளிக்கும்.

# ஆந்திர தலைநகர் மேம்பாட்டுக்கு ரூ.3,165 கோடி: உலக வங்கி விடுவித்தது

**அமராவதி, ஏப். 12:** ஆந்திர மாநில தலைநகர் அமராவதி மேம்பாட்டுக்கு ரூ.3,165 கோடியை உலக வங்கி விடுவித்தது. அடுத்தகட்டமாக இம்மாத இறுதியில் ரூ.1,396 கோடியை விடுவிக்க இருக்கிறது.

இது தொடர்பாக மாநில அரசு அதிகாரிகள் மேலும் கூறியதாவது:

உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை ஆந்திர தலைநகர் மேம்பாட்டுத் திட்டத்துக்கு நிதி வழங்கி வருகின்றன. இதற்கு 8 முதல் 8.5 சதவீதம் வரை வட்டி உண்டு.

சர்வதேச சூழ்நிலைக்கு ஏற்பட வட்டி மாறக் கூடியதாக இருக்கும். இரு வங்கிகளும் சேர்ந்து மொத்தம் ரூ.14,894 கோடி கடன் தர ஒப்புக் கொண்டுள்ளன. இது தவிர மத்திய அரசு ரூ.15,000 கோடி நிதி ஒதுக்கிறது.

இதில் ரூ.1,400 கோடி முதல் கட்டமாக விடுவிக்கப்பட இருக்கிறது.

சர்வதேச வங்கிகளின் கடனை 29 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். தேவை ஏற்பட்டால் கூடுதலாக 6 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்படும். உலக வங்கிக் கடனை 2031 ஜூன் மாதத்தில் இருந்து திருப்பிச் செலுத்தத் தொடங்க வேண்டும்.

வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களால் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படாதவாறு அமராவதி நகரம் கட்டமைக்கப்படுகிறது.

சர்வதேச அளவில் முன்னணி தொழில்நுட்பங்களுடன் அமராவதி உருவாகும். வளர்ச்சி, வேலைவாய்ப்பு, மக்களுக்கு சிறப்பான வாழ்க்கைத்தரம் ஆகியவை அமராவதியில் இருக்கும் என்றனர்.

# அருணாசலில் சில இடங்களுக்குப் புதிய பெயரிட்ட சீனா

## இந்தியா நிராகரிப்பு

**புது தில்லி, ஏப்.12:** அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள சில இடங்களுக்கு சீனா புதிய பெயர்கள் சூட்டியதை இந்தியா நிராகரித்துள்ளது.

இந்தியாவின் அருணாசலப் பிரதேச மாநிலத்தை தங்களுக்கு சொந்தமானமான திபெத்துக்கு உட்பட்ட பகுதி என்று சீனா பல ஆண்டுகளாக உரிமை கொண்டாடி வருகிறது. அவ்வப்போது அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள மலைகள், குன்றுகள் உள்ளிட்ட இடங்களுக்கு புதிய பெயரிடுவதையும் சீனா வழக்கமாக வைத்துள்ளது. இதற்கு இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள மேலும் சில இடங்களுக்கு சீனா புதிய பெயரிட்டுள்ளது. இதுகுறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை பேசிய இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வாலிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:

அந்த இடங்கள் அனைத்தும் இந்தியாவுக்கு சொந்தமான இடங்களாகும். அவை எப்போதும் இந்திய பகுதிகளாகவே இருக்கும். அதை ஒருபோதும் இந்தியாவில் இருந்து பிரிக்க முடியாது. ஆதலால் அந்த இடங்களுக்கு சீனாவால் சூட்டப்பட்ட புதிய பெயர்களை இந்தியா திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

அந்த இடங்களுக்குப் புதிய பெயர் வைப்பதாலோ, சொந்தம் கொண்டாடுவதாலோ, உண்மை நிலையில் எந்த மாற்றமும் ஏற்படாது. இந்தியா-சீனா இடையேயான இருதரப்பு உறவுகளில் எதிர்மறையை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதையும், சிறப்பான புரிதல் ஏற்பட மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதையும் சீனா தவிர்க்க வேண்டும் என்றார்.

**1. மக்மஹோன் கோடு (McMahon Line)**

• பகுதி: இது இந்தியாவின் அருணாச்சலப் பிரதேச மாநிலத்திற்கும் திபெத்திற்கும் (சீனா) இடையிலான எல்லைக் கோடு ஆகும்.

• வரலாறு: 1914-ல் பிரிட்டிஷ் இந்தியா மற்றும் திபெத் பிரதிநிதிகளுக்கு இடையே கையெழுத்தான சிம்லா ஒப்பந்தத்தின்படி இது உருவாக்கப்பட்டது.

• நிலைப்பாடு: இந்தியா இதனை ஒரு சர்வதேச சட்டப்பூர்வ எல்லையாக அங்கீகரிக்கிறது. ஆனால், சீனா இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுக்கிறது.

**2. உண்மை கட்டுப்பாட்டுக் கோடு (LAC)**




**1. McMahon Line**

• Area: This is the border line between the Indian state of Arunachal Pradesh and Tibet (China).

• பகுதி: இது லடாக் முதல் அருணாச்சலப் பிரதேசம் வரை நீளும் ஒட்டுமொத்த இந்தியா - சீனா எல்லையையும் குறிக்கிறது. குறிப்பாக லடாக் (Ladakh) பகுதியில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.
• வரலாறு: இது 1962-ல் நடைபெற்ற இந்திய - சீனப் போருக்குப் பிறகு உருவான ஒரு தற்காலிக எல்லைக் கோடு (Ceasefire line) ஆகும்.

• எல்லையின் நீளம்: இந்தியா சீனாவுடன் சுமார் 3,488 கி.மீ நீளமுள்ள எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.




• History: It was created in 1914 as per the Simla Agreement signed between representatives of British India and Tibet.

• Position: India recognizes it as an internationally legal border. However, China refuses to accept the agreement.

2. **Line of Actual Control (LAC)**

• Area: It refers to the entire India-China border stretching from Ladakh to Arunachal Pradesh. It is particularly important in the Ladakh region.

• History: It is a temporary border line (Ceasefire Line) that was established after the 1962 India-China War.

• Length of Border: India shares a border with China of about 3,488 km.




Pax Silica is a US-led strategic coalition launched in December 2025 to secure global supply chains for critical minerals, semiconductors, and AI technologies.
• It unites nations to reduce reliance on single-source suppliers and ensure trusted digital infrastructure.
• Its founding members are the United States, Japan, South Korea, Singapore, Australia,

• பாக்ஸ் சிலிக்கா என்பது, முக்கிய கனிமங்கள், குறைக்கடத்திகள் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய விநியோகச் சங்கிலிகளைப் பாதுகாப்பதற்காக, டிசம்பர் 2025-இல் தொடங்கப்பட்ட, அமெரிக்கா தலைமையிலான ஒரு மூலோபாயக் கூட்டணியாகும்.
• ஒற்றை மூல விநியோகஸ்தர்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும், நம்பகமான டிஜிட்டல் உள்கட்டமைப்பை உறுதி செய்யவும் இது நாடுகளை ஒன்றிணைக்கிறது.
• இதன் நிறுவன உறுப்பினர்கள் அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இஸ்ரேல், இங்கிலாந்து மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகும்.
• பிப்ரவரி 2026-ல் நடைபெற்ற AI இம்பாக்ட் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்தியா பாக்ஸ் சிலிக்காவில்

| | |
|---|---|
| Israel, UK, and UAE.<br>• India formally joined Pax Silica on the sidelines of the AI Impact Summit in February 2026. | முறையாக இணைந்தது. |

## 2. National News

| | |
|---|---|
| India Ranks third globally in Renewable Energy Installed Capacity<br><br>According to the Renewable Energy Statistics 2026 released by the International Renewable Energy Agency (IRENA), India now ranks third globally in Renewable Energy Installed <br>Capacity | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவப்பட்ட திறனில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது<br><br>சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமையால் (IRENA) வெளியிடப்பட்ட 'புதுப்பிக்கத்தக்க எரிசக்தி புள்ளிவிவரங்கள் 2026'-இன் படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவப்பட்ட திறனில் இந்தியா தற்போது உலகளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது என மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி அறிவித்துள்ளார். |
| | |




On April 13, 2026, India commemorates the 107th anniversary of the 1919 Jallianwala Bagh massacre in Amritsar, a defining moment in the freedom struggle. Events in 2026 highlight the continued demand for an official, verified list of martyrs and remembrance of the 1,650+ rounds fired on unarmed civilians.

**ஏப்ரல் 13**
**ஜல்லியன்வாலா பாக் படுகொலை நாள்**

1919 ஆம் ஆண்டு இந்த நாளில் தங்கள் உயிர்களை தியாகம் செய்த வீரர்களை நினைவுகூர்கிறோம்.

2026 ஏப்ரல் 13 அன்று, இந்தியா 1919 ஆம் ஆண்டில் அமிர்தசரஸில் நடந்த ஜல்லியன்வாலா பாக் படுகொலையின் 107ஆம் ஆண்டு நினைவு நாளை அனுசரிக்கிறது. இது சுதந்திரப் போராட்டத்தின் முக்கியமான திருப்புமுனையாகும். 2026 நிகழ்வுகள், உயிரிழந்தவர்களின் அதிகாரப்பூர்வமான, சரிபார்க்கப்பட்ட பட்டியலுக்கான தொடர்ந்த கோரிக்கையையும், ஆயுதமற்ற பொதுமக்கள் மீது சுடப்பட்ட 1,650க்கும் மேற்பட்ட தோட்டாக்களை நினைவுகூர்வதையும் வலியுறுத்துகின்றன.

SHANTI சட்டம், 2025 **(Sustainable Harnessing and Advancement of Nuclear Energy for Transforming India Act)**

SHANTI Act, 2025 (Sustainable Harnessing and Advancement of Nuclear Energy for Transforming India Act)

**1. Objective of the Act**

To achieve 100 GW of nuclear power capacity by 2047.

| | |
|---|---|
| <br><br>1. சட்டத்தின் நோக்கம் (Objective)<br>2047-க்குள் 100 GW அணுசக்தித் திறனை அடைவது.<br>2070-க்குள் நிகர பூஜ்ஜிய (Net Zero) உமிழ்வு இலக்கை அடைய அணுசக்தியைப் பயன்படுத்துதல்.<br>அணுசக்தித் துறையில் நிலவிய அரசு ஏகபோக உரிமையைத் தளர்த்தி, தனியார் பங்களிப்பை அனுமதித்தல்.<br><br>2. நீக்கப்பட்ட பழைய சட்டங்கள் (Repealed Acts)<br>இந்த ஒரு சட்டம் பின்வரும் இரண்டு முக்கியச் சட்டங்களுக்குப் மாற்றாகக் கொண்டுவரப்பட்டது:<br>அணுசக்திச் சட்டம், 1962 (Atomic Energy Act, 1962).<br>அணு சேதத்திற்கான குடிமைப் பொறுப்புச் சட்டம், 2010 (Civil Liability for Nuclear Damage Act, 2010)<br>3. <u>முக்கிய அம்சங்கள் (Key Features)</u><br>தனியார் பங்களிப்பு: முதன்முறையாக, அணுமின் நிலையங்களை அமைக்கவும் இயக்கவும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது (மத்திய அரசின் கடுமையான கண்காணிப்பின் கீழ்). | To use nuclear power to achieve the goal of Net Zero emissions by 2070.<br><br>To relax the government monopoly in the nuclear power sector and allow private participation.<br>**<u>2. Repealed Acts</u>**<br>This single Act replaced two key Acts:<br>Atomic Energy Act, 1962<br>Civil Liability for Nuclear Damage Act, 2010<br>**<u>3. Key Features</u>**<br>Private Participation: For the first time, private companies have been allowed to set up and operate nuclear power plants (under strict supervision of the Central Government). |
| | |
| <br><br>Uttar Pradesh secured the top position in the country by making purchases worth ₹22,337 | • 2025-26 நிதியாண்டில், GeM (அரசு மின் சந்தை) இணையதளம் மூலம் ₹22,337 கோடி மதிப்பிலான கொள்முதல்களை மேற்கொண்டு, உத்தரப் பிரதேசம் நாட்டில் முதலிடத்தைப் பிடித்தது.<br>•GeM என்பது அரசு நிறுவனங்கள், துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஒரு பிரத்யேக |

| | |
|---|---|
| crore through the GeM (Government e Marketplace) portal in FY 2025–26.<br>• GeM is a dedicated e-marketplace for goods and services procured by Government Organisations, Departments, and PSUs.<br>• The portal aims to enhance transparency, efficiency, and speed in public procurement. | மின் சந்தையாகும்.<br>• இந்த இணையதளம், பொதுக் கொள்முதலில் வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் வேகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |

## 3.PYQ CA Questions

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) என்ற அமைப்பு தமிழ்நாடு அரசால் கீழ்க்கண்ட தொழில் அமைப்பினை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது

(i) கனரகத் தொழிற்சாலை

(ii) நடுத்தரத் தொழிற்சாலை

(iii) சிறு தொழில் தொழிற்சாலை

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

State Industries Promotion Corporation of Tamil Nadu (SIPCOT) was established by Tamil Nadu Government for the development of

(i) Large Scale Industries

(ii) Medium Scale Industries

(iii) Small Scale Industries

(A) (i) and (ii) only

(B) (ii) only

(C) (ii) and (iii) only

(D) (i) and (iii) only

## SIPCOT was established in the year 1971

To promote Medium and Large Scale Industries in Tamil Nadu by Developing Industrial Parks particularly in the industrially backward areas of the State of Tamil Nadu to make the State surge to the forefront as the most industrially advanced State in India thereby increasing employment and sustaining balanced regional growth of industries in the State of Tamil Nadu.

## 4. PRACTICAL MCQ'S

| | |
|---|---|
| 1. Pax Silica, a US-led coalition for securing global supply chains, was launched in which year?<br>A. 2022<br>B. 2023<br>C. 2025<br>D. 2021 | **1.** உலகளாவிய விநியோகச் சங்கிலிகளைப் பாதுகாப்பதற்கான அமெரிக்க தலைமையிலான கூட்டமைப்பான பாக்ஸ் சிலிக்கா (**Pax Silica)** எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது**?**<br>**A. 2022**<br>**B. 2023**<br>**C. 2025**<br>**D. 2021** |
| Which state has topped the country by making purchases worth ₹22,337 crore through the GeM portal in FY 2025–26?<br>A. Uttar Pradesh<br>B. Madhya Pradesh<br>C. Telangana<br>D. Rajasthan | **2025–26** நிதியாண்டில் **GeM** இணையதளம் மூலம் ₹**22,337** கோடி மதிப்புள்ள கொள்முதல்களைச் செய்து**,** நாட்டிலேயே முதலிடம் பிடித்த மாநிலம் எது**?**<br><br>**A.** உத்தரப் பிரதேசம்<br>**B.** மத்தியப் பிரதேசம்<br>**C.** தெலங்கானா<br>**D.** ராஜஸ்தான் |

விக்கோ சாட்-1 எனும் ஒரு சிறிய செயற்கைக்கோள் எந்த மாநிலத்தை சேர்ந்த மாணவர்களால் உருவாக்கப் பட்டது?

A) தமிழ்நாடு

B) கர்நாடகா

C) கேரளா

D) ஆந்திர பிரதேசம்

இந்தியாவின் Zero Prize எதனுடன் தொடர்புடையது

A) சுற்றுச்சூழல்

B) இலக்கியம்

C) கலை

D) இசை

ஐ.நா. சபையால் சாலைப் பாதுகாப்புக் கான உலகளாவிய சாம்பியனாக நியமிக்கப்பட்டவர் யார்?

A) ஸ்மிருதி மந்தனா

B) பி.வி.சிந்து

C) சச்சின் டெண்டுல்கர்

D) விராட் கோலி

உலக வனவிலங்கு தினம் அனுசரிக்கப் படுவது

A) மார்ச் 01

B) மார்ச் 02

C) மார்ச் 03

D) மார்ச் 04

## 5. REVISION




தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது, 2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத நடுப்பகுதியில் பூம்புகார்-நாகப்பட்டினம் கடற்கரையில் கடலடி ஆய்வினைத் தொடங்க உள்ளது. நீரில் மூழ்கி காணப்படும் எஞ்சிய பாகங்களை ஆராய்ந்து தமிழ்நாட்டின் கடல்சார் வரலாற்றை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஈரோடு மாவட்டத்திலுள்ள எலத்தூர் ஏரியை மாநிலத்தின் 3-வது பல்லுயிர் பாரம்பரியத் தலமாக தமிழக அரசு அறிவித்துள்ளது. எலத்தூர் ஏரி 37

| | |
|---|---|
| 15th January - Army Day<br>1st February - Coast Guard Day<br>10th March - Central Industrial Security Force Day<br>7th October - Rapid Action Force Day<br>8th October - Air Force Day<br>4th December - Navy Day<br>7th December - Armed Forces Flag Day | தமிழக சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறையானது நீலக்கொடி சான்றிதழுக்காக ஆறு கடற்கரைகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கடற்கரைகளில் சென்னை பெருநகர பகுதியில் உள்ள திருவான்மியூர், பாலவாக்கம் மற்றும் உத்தண்டி ஆகியவை அடங்கும். |
| | |
| 2023-24-ஆம் ஆண்டிற்கான தொழில்கள் கணக்கெடுப்பின் படி தமிழ்நாடு 15.43% என்ற அளவுடன் தொழிற்சாலைகள் எண்ணிக்கை என்ற அளவில் இந்திய மாநிலங்களுள் முதலிடம் பிடித்துள்ளது.<br>பகுத்தறிவு பகலவன் என அறியப்படும் தந்தை பெரியாரின் உருவப்படத்தை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.<br>கடலூரை தலைமையிடமாகக் கொண்டு ரூ.10 கோடியில் தமிழ்நாடு முந்திரி வாரியம் அமைக்கப்பட உள்ளது. துறை | நாட்டிலேயே முதல் முறையாக மூத்த குடிமக்களுக்கான கமிஷனை கேரள அரசு அமைத்துள்ளது. மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்கவும், அவர்களின் உரிமைகளை காக்கவும் இந்த கமிஷன் உதவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | |